இதர பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இப்பயிற்சிக்கான செலவினம் முழுவதையும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஏற்றுக்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-45*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பவியல் துறையின் மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்கை விளக்கக் குறிப்பு குறித்தும், இதர பொருட்கள் குறித்தும் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை அளித்து, விவாதத்தில் கலந்துகொண்டு, தங்களின் மேலான கருத்துகளையும், நல்ல பல யோசனைகளையும் இந்த அவையின்முன் எடுத்து வைத்துள்ளார்கள். மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கும், வெட்டுத் தீர்மானங்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசின் சார்பாக எனது பதிலினை இந்த அவையின்முன் எடுத்து வைத்துள்ளேன். எனது பதிலுரையினை ஏற்று, தங்களது வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. விதி 110—ன்கீழ் அறிக்கை

### காவேரியில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நீரைப் பெற்றிட உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு, நேரடி நெல் விதைப்புமூலம் சம்பா சாகுபடி மேற்கொள்ள தொகுப்பு திட்டம், கர்நாடக அரசின் மேகதாது அணைத் திட்டத்தை எதிர்த்து சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்குவது காவேரி டெல்டா பகுதி. இந்தப் பகுதியின் ஜீவ நாடியாக உள்ளது காவேரி நதிநீர். கர்நாடக மாநிலத்துடன் நமக்குள்ள காவேரி நதிநீர்ப் பிரச்சினை, பல ஆண்டுகளாகத் தொடர்ந்துவரும் பிரச்சினையாகும்.*

*1986 ஆம் ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, காவேரி நதிநீர்ப் பிரச்சினைக்காக நடுவர் மன்றத்தை அமைக்க வேண்டுமென மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. காவேரி நீர்ப்பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமை பாதுகாப்புச் சங்கம் என்ற அமைப்பு, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்தது. அதில் தமிழக அரசு தன்னையும் இணைத்துக்கொண்டது. நடுவர் மன்றத்தை அமைக்குமாறு 1990 ஆம் ஆண்டு மே மாதம் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன்படி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தலைமையிலான அரசால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு உயிரூட்டப்பட்டு, காவேரி நடுவர் மன்றம் 1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அமைக்கப்பட்டது.*

*1991 ஆம் ஆண்டு இடைக்கால ஆணையை வழங்கிய காவேரி நடுவர் மன்றம், பின்னர் தனது இறுதி ஆணையை 5-2-2007 அன்று வழங்கியது. இந்த ஆணையினை மத்திய அரசு தனது அரசிதழில் வெளியிடவில்லை. உச்ச நீதிமன்றத்தில் எனது தலைமையிலான அரசு மேற்கொண்ட சட்டப்போரின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற உத்தரவின்படி, மத்திய அரசு காவேரி நடுவர் மன்ற ஆணையை 19-2-2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எனினும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு இன்னமும் அமைக்காத காரணத்தால் காவேரி நீரில் நமக்குரிய பங்கை கர்நாடக அரசு விடுவிப்பதில்லை. எனவே, இந்த அமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் எனது தலைமையிலான அரசால், 2013 ஆம் ஆண்டே மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, அவை இன்னமும் நிலுவையில் உள்ளன.*

*இதற்கிடையில் உச்ச நீதிமன்றம் நீண்ட கால நிலுவையில் உள்ள வழக்குகளை விசாரிப்பதற்காக, சிறப்பு அமர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. இவற்றில் காவேரி வழக்கும் ஒன்றாகும். உச்ச*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஆகஸ்ட் 18

நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வின்முன் காவேரி பிரச்சினை சம்பந்தப்பட்ட வழக்குகள் 28-3-2016 அன்று விசாரணைக்கு வந்தபோது, உச்ச நீதிமன்றம் இவ்வழக்குகளை 19-7-2016 அன்று பட்டியலிடும்படி ஆணையிட்டது. பின்னர், இந்த வழக்கு 18-10-2016 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

முற்பகல் 11-50

காவேரி நடுவர் மன்ற ஆணையின்படி, ஒரு பாசன ஆண்டானது ஜூன் மாதம் முதல் அடுத்த ஆண்டு மே மாதம் வரை உள்ள காலமாகும். நடப்புப் பாசன ஆண்டில் கர்நாடக அரசு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைப்படி நீரை விடுவிக்காததால் எனது ஆணையின்பேரில், தலைமைச் செயலாளர் அவர்களால் கர்நாடக அரசுக்கும், மத்திய அரசுக்கும் 30-7-2016 அன்று அனுப்பப்பட்ட கடிதங்களில் ஏற்கெனவே 1-6-2016 முதல் 26-7-2016 வரையில் ஏற்பட்ட குறைபாட்டு நீர் அளவான 22.934 டி.எம்.சி. அடி நீரை விடுவிக்க வேண்டுமெனவும், இனிவரும் மாதங்களில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படி நீரை விடுவிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. எனினும், கர்நாடக அரசிடமிருந்தோ, மத்திய அரசிடமிருந்தோ இதுவரையில் எந்தவித பதிலும் வரப்பெறவில்லை.

கர்நாடக அரசின் நான்கு பெரிய நீர்த்தேக்கங்களான ஹாரங்கி, ஹேமாவதி, கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி ஆகியவற்றின் மொத்த நீர்க்கொள்ளளவு 114.571 டி.எம்.சி. அடியாகும். இவற்றில் 17-8-2016 அன்றைய நிலவரப்படி, 64.849 டி.எம்.சி. அடி நீர் இருப்பு உள்ளது. கர்நாடக அரசு இந்த நான்கு அணைகளிலிருந்து அதன் பாசனத்திற்காக நீரைத் தொடர்ந்து விடுவித்து வருகிறது. மேட்டூர் அணையில் 17-8-2016 அன்றைய நிலவரப்படி, 27.560 டி.எம்.சி. அடி நீர்தான் இருப்பு உள்ளது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படி, கர்நாடக அரசு தமிழகத்திற்குரிய நீரை விடுவிக்க முன்வராத நிலையில், தமிழ்நாட்டிற்குரிய பங்கு நீரைப் பெற்றிட, உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றினை விரைவில் தாக்கல் செய்ய நான் உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இடைக்கால மனு இன்னும் ஓரிரு தினங்களில் தாக்கல் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பின்னர், உச்ச

2016 ஆகஸ்ட் 18] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நீதிமன்றத்தின்மூலம் உரிய ஆணைகள் பெறப்பட்டு, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படி நமக்குரிய பங்கினைப் பெற்றிடுவோம் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேட்டூர் அணையில் போதிய அளவு நீர் இல்லாததால் குறுவை நெல் சாகுபடிக்கு ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறந்துவிட இயலவில்லை. நடப்பு கோடைப் பருவத்தில் 6 டெல்டா மாவட்டங்களில் போதிய அளவு மழை பெய்ததால் நிலத்தடி நீரைக் கொண்டு சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக, 54 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான குறுவை சாகுபடித் திட்டம் ஒன்றை 1-6-2016 அன்று நான் அறிவித்தேன். இதன் காரணமாக, கணிசமான பரப்பளவில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இயல்பான பருவமழை மற்றும் மேட்டூர் அணைக்குத் தேவையான நீர் கிடைக்கப்பெறும்போது, டெல்டா மாவட்டங்களில் சம்பா பருவத்தில் நெற்பயிர் சுமார் 14 இலட்சத்து 93 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நாற்று நடவு முறைமூலம் சாகுபடி செய்யப்படும்.

முற்பகல் 11-55

நான் ஏற்கெனவே தெரிவித்தபடி, உச்ச நீதிமன்றத்தில் நமக்குச் சாதகமான தீர்ப்பினைப் பெற்று, சம்பா சாகுபடிக்கு விரைவில் தண்ணீர் திறக்க முடியும் என நான் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனினும், ஒரு நல்ல அரசு என்பது எத்தகைய இடர்பாடுகளையும் எதிர்கொள்ளும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்தக்கூடிய அரசாக இருக்க வேண்டும். எனவே, எதிர்வரும் வடகிழக்குப் பருவ மழையிலும், குறைவான மழை மற்றும் நமக்குத் தேவையான அளவு தண்ணீர் மேட்டூர் அணையில் கிடைக்கப் பெறாத சூழ்நிலையிலும், டெல்டா விவசாயிகள் எந்தவிதப் பாதிப்புக்கும் உள்ளாகக்கூடாது என்பதால், சம்பா சாகுபடிக்கென ஒரு சிறப்புத் திட்டத்தை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மாத இறுதிக்குள் சம்பா பயிருக்குத் தேவையான தண்ணீர், மேட்டூர் அணையில் கிடைக்கப் பெறவில்லை எனில், நேரடி நெல் விதைப்புமூலம் சம்பா சாகுபடி மேற்கொள்வதற்கு

ஒரு தொகுப்புத் திட்டத்தை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி,

1. விவசாயிகள் நெல் விதைப்பு மேற்கொள்வதற்காக, தரிசு உழவுப் பணிகளுக்கு மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏக்கர் ஒன்றுக்கு 500 ரூபாய் வீதம் இந்த மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகள் பெற ஏதுவாக, விதைகளுக்கு கிலோ ஒன்றுக்கு பத்து ரூபாய் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. இயந்திர முறையில் நெல் விதைப்பு மேற்கொள்ள ஏக்கர் ஒன்றுக்கு, 600 ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளப்படும் இடங்களில், களை பாதிப்பு அதிகளவு இருக்கும் என்பதால், களைக்கொல்லி மருந்து தெளிக்க, ஏக்கருக்கு 280 ரூபாய் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 9 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. நடவு இயந்திரம்மூலம், நடவு மேற்கொள்ளப்படும் இடங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 2,000 ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. துத்தநாகச் சத்து குறைபாட்டினால், நெல் மகசூல் குறையும் என்பதால், இத்தகைய குறைபாடுள்ள வயல்களில், துத்தநாக சல்பேட் Zinc Sulphate பயன்படுத்த, ஏக்கருக்கு 200 ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மொத்தத்தில் போதுமான தண்ணீர் கிடைக்காத நிலையில், நேரடி நெல் சாகுபடி மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில்,

2016 ஆகஸ்ட் 18] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நான் தற்போது தெரிவித்தபடி, சம்பா சாகுபடிக்காக 64 கோடியே 30 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

கர்நாடக அரசு மேகதாது அணைத் திட்டத்தை நிறைவேற்றப் போவதாக கர்நாடக மாநில முதலமைச்சர் தனது சுதந்திர தின விழா உரையில் தெரிவித்துள்ளது, டெல்டா விவசாயிகளை மிகுந்த கவலைக்குள்ளாக்கி உள்ளது. கர்நாடகம் மேகதாது அணை கட்டுவது தொடர்பாக, நம்முடைய கடந்த சட்டமன்றத்தில் இரண்டு அரசினர் தனித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கு மாறாக, மேகதாது அணை கட்டும் பணிகளையோ அல்லது வேறு எந்தப் புதிய திட்டங்களையோ கர்நாடக அரசு மேற்கொள்ளக்கூடாது எனவும்; காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் முடிவுக்கு வரும் வரையிலும் தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்றும் ஆணை வழங்குமாறு உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றை தமிழ்நாடு அரசு 18-11-2014 அன்று தாக்கல் செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடக அரசு, அதன் 18-11-2014 ஆம் நாளிட்ட கடிதத்தில், ஏற்கெனவே நிலுவையிலுள்ள இடைக்கால மனுவில், உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்காமல் மேகதாது திட்டத்தை நிறைவேற்றப் போவதில்லை என்று தெரிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

8-3-2016 அன்று கர்நாடக அரசு தமிழகத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்காமல் மேகதாதுவில் அணை கட்டுவது பற்றிய எண்ணம் ஏதும் இல்லை என்று மீண்டும் தெரிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதையே உச்ச நீதிமன்றத்திற்கும் கர்நாடக அரசு தெரிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

காவேரி ஆற்றின் குறுக்கே கர்நாடக அரசு காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மீறும் வகையிலும், தமிழ்நாடு அரசின் இசைவு பெறாமலும் எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்த

*உத்தேசிக்குமானால், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட, சட்டபூர்வமான அனைத்து நடவடிக்கைகளையும் எனது தலைமையிலான அரசு மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

### 6. காவேரியில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நீரைப் பெற்றிட உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு, நேரடி நெல் விதைப்புமூலம் சம்பா சாகுபடி மேற்கொள்ள தொகுப்பு திட்டம், கர்நாடக அரசின் மேகதாது அணைத் திட்டத்தை எதிர்த்து சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுதல்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை தரணிவாழ் மக்கள் மகிழும் வகையில், காவேரியின் உரிமையை நிலைநாட்டும் வகையில், விதி எண் 110-ன்கீழ் வெளியிட்டிருக்கும் அறிவிப்புகளை மனமார வரவேற்று பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உரிமைகளை விட்டுக் கொடுக்கும் தலைவர்களுக்கு மத்தியில், உரிமைகளை போராடிப் பெற்றுத் தரும் ஒரு தலைவராக நமது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*'வேற்றுமையில் ஒற்றுமை' என்பது நம்முடைய இந்தியத் திருநாட்டின் பண்பாடாகும். பல்வேறு மொழிகள், கலாச்சாரங்கள், பண்பாடுகள், பிராந்திய வேறுபாடுகள் என எத்தனையோ வேற்றுமைகள் இருந்தாலும், இந்தியர் என்ற பண்பாடு ஒரு மாலையாக நம்மை இணைக்கிறது. ஆனால், அந்தத் தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில், தண்ணீரிலே விளையாடி, மாநிலங்களுடைய உரிமைகளைப் பறிக்கக்கூடிய சில பாதக வேலைகளை சிலர் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் அவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் பிரிந்து சென்றது. சிங்கப்பூர் சின்னஞ்சிறிய, தண்ணீர் வளமற்ற ஒரு தீவு.*